தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1980 ஜுன் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு ".

எந்தப் பொருள் எந்தக் குணம் உடையதாகத் தோன்றினாலும், அந்தப் பொருளின் உண்மையான தன்மையினை அறிந்து கொள்ளுவதே அறிவுடைமையாகும்.

1. இரங்கல் குறிப்பு.

(அ) முன்னாள் உறுப்பினர்களான திரு. டி. பி. கேசவ ரெட்டியார், திரு. இரத்தின பாலகுருசாமி மறைவு

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதைப்பற்றி ?

Dr. K. SOURIRAJAN : Affecting the privilege of the House ; I have already given notice of it in your chambers.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் இன்றைக்கு இரங்கல் தீர்மானம் வருகிறது. அதற்குப் பிறகு அதை வைத்துக்கொள்ளலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் கே. சௌரிராஜன் : நான் ப்ரிவிலேஜ் மோஷன் எழுப்பியிருக்கிறேன். இரங்கல் தீர்மானம் இருக்கிறது, பின்னர் எடுத்துக்கொள்ளலாம் என்றால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்து இருக்கும் ப்ரிவிலேஜ் மோஷன் பரிசீலனையில் இருக்கிறது.

டாக்டர் கே. சௌரிராஜன் : மன்றத்தின் உரிமை பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறபோது, பரிசீலனை, என்ன செய்வது ? This should precede everything.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுத்த பிரிவிலேஜ் மோஷன் என் பரிசீலனையில் இருக்கிறது. அதன்மீது நான் தீர்ப்புச் சொல்கிற வரையில் அமைதியாக இருங்கள். திடுக்கிடும் செய்தி எல்லாம் வந்து இருக்கிறது. கொஞ்சம் பொறுங்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. டி. பி. கேசவ ரெட்டியார், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் தற்போதைய நியமன உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி ஆகியோர் முறையே 16-4-1980, 17-4-1980-ம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. பி. கேசவ ரெட்டியார் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை வட ஆற்காடு மாவட்டம் போளூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் 1978 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவையில் ஆளுநரால் நியமனம் செய்யப்பெற்ற உறுப்பினராக நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

REPORTING SECTION

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், அரை மணி நேரம் பேரவையின் நிகழ்ச்சிகள் ஒத்தி வைக்கப்படுகின்றன. முற்பகல் 10-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

* * * * *

பேரவை மீண்டும் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் கூடியது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1. இரங்கல் குறிப்பு (தொடர்ச்சி)

(ஆ) நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் காந்தி அவர்களின் மறைவு (தி)

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் அருமை மைந்தரும், நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான திரு. சஞ்சய் காந்தி அவர்கள் இன்று காலையில் 'கிளைடர்' விமானத்தில் பறந்தபோது எதிர்பாராதவிதமாக விபத்திற்குள்ளாகி மறைந்துவிட்ட துக்ககரமான செய்தி கேட்டு இப் பேரவை பெரிதும் வருத்தம் அடைகிறது ;